**சாவகச்சேரி நகர சபை - 2023**

-------------------------------------

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

சாவகச்சேரி நகர சபையின் 2023 திசெம்பர் 31 இல் உள்ளவாறான ஐந்தொகை, அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான வருமானச் செலவினக் கணக்கு, காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் முக்கியமான கணக்கீட்டு கொள்கைகளுக்கான தகவல்களை உள்ளடக்கிய நிதிக்கூற்றுக்களுக்கான குறிப்புக்கள் உள்ளடங்கிய 2023 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் நகர சபை சட்டத்தின் (255 ஆம் அத்தியாயம்) 181(1) ஆம் பிரிவு மற்றும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையில் உள்ளடக்கப்பட்ட ஏற்பாடுகளின் பிரகாரம் எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதும் எனது கருத்துரைகளும் அவதானிப்புக்களும் இந்த அறிக்கையில் காணப்பிக்கப்பட்டுள்ளன.

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்டுள்ள விடயங்களிலிருந்தான தாக்கங்களைத் தவிர்த்து, நிதிக்கூற்றுக்களிலிருந்து 2023 திசெம்பர் 31 இல் உள்ளவாறு சாவகச்சேரி நகர சபையின் நிதிநிலைமை மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதன் நிதிச் செயலாற்றல் மற்றும் காசுப்பாய்ச்சலானது பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு நடைமுறைகளுக்கு இணங்க உண்மையான மற்றும் நியாயமான நிலைமையை பிரதிபலிக்கின்றது என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் காட்டப்பட்டுள்ள விடயங்களை அடிப்படையாகக் கொண்டு எனது அபிப்பிராயம் முனைப்பழியாக்கப்படுகின்றது.

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக எனது பொறுப்பு, கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் என்ற பிரிவில் மேலும் விபரிக்கப்பட்டுள்ளது. எனது முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகின்றேன்.

### 1.3 நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக முகாமைத்துவத்தின் மற்றும் தொடர்பான ஆளுகைத் தரப்பினரின் பொறுப்புக்கள்

இந்நிதிக்கூற்றுக்களை பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு நடைமுறைகளுக்கு இணங்க தயாரித்தல் மோசடிகள் மற்றும் தவறுகள் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் இன்றிய நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்க கூடிய வகையில் உள்ளகக் கட்டுப்பாட்டினைத் தீர்மானித்தல் முகாமைத்துவத்தின் பொறுப்பாகும்.

நகர சபையின் நிதி அறிக்கையிடல் நடைமுறை சம்பந்தமான பொறுப்பு ஆளுகைத் தரப்பினர்களால் ஏற்றுக் கொள்ளப்படும்.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 16(1) உப பிரிவின் பிரகாரம் நகர சபையின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு முடியுமான வகையில் சொந்த வருமானங்கள், செலவுகள், சொத்துக்கள், பொறுப்புக்கள் என்பன தொடர்பாக முறையான ஏடுகள் மற்றும் அறிக்கைகள் பேணப்படுதல் வேண்டும்.

## 1.4 கணக்காய்வு விடயப் பரப்பு (நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வு தொடர்பான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள்)

ஒட்டுமொத்தமாக நிதிக்கூற்றுக்கள் மோசடி மற்றும் தவறுகளின் காரணமாக ஏற்படுகின்ற பொருண்மையான பிறழ் கூற்றுக்களற்றவை என்பதற்கு நியாயமான உறுதிப்பாட்டை வழங்குவதும் எனது அபிப்பிராயத்தை உள்ளடக்குகின்ற கணக்காய்வு அறிக்கையை வழங்குவதும் எனது குறிக்கோளாகும். நியாயமான உறுதிப்பாடானது உயர் மட்டத்திலான ஒரு உறுதிப்பாடாகக் காணப்படுகின்ற போதிலும், இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எவ்வேளையிலும் பொருண்மையான பிறழ் கூற்றுக்களை வெளிப்படுத்தும் என்பதற்கான உத்தரவாதமாக இருக்கமாட்டாது. மோசடிகள் மற்றும் தவறுகள் தனியாகவோ அல்லது கூட்டாகவோ தாக்கத்தை ஏற்படுத்துவதன் காரணமாக பொருண்மையான பிறழ்கூற்றுக்கள் ஏற்படக்கூடியதுடன் இந்நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துபவர்களால் எடுக்கப்படுகின்ற பொருளாதார தீர்மானங்கள் எடுக்கும் போது அது தொடர்பாக கவனித்தல் வேண்டும்.

இலங்கை கணக்காய்வு நியமத்தின் பிரகாரம் கணக்காய்வின் பகுதியொன்றாக என்னால் கணக்காய்வின் போது தொழில்சார் வெளிப்படைத்தன்மை மற்றும் தொழில்சார் ஐயப்பாடுகளுடன் கணக்காய்வு மேற்கொள்ளப்பட்டது. என்னால் மேலும்,

- வெளிப்படுத்தப்பட்ட கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படையினை வழங்கும் போது மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களில் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களினால் ஏற்படும் ஆபத்துக்களை இனங்காண்பற்கும் மதிப்பீடு செய்வதற்குமாக சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகள் திட்டமிடப்பட்டு அமுல்படுத்தப்பட்டன. பிழையாகக் காட்டுவதன் காரணமாக ஏற்படுகின்ற பொருண்மையான பிறழ்கூற்றுக்களிலிருந்து இடம்பெறுகின்ற தாக்கங்களை விட மோசடிகளால் இடம்பெறுகின்ற தாக்கங்கள் பாரியதாக இருப்பதானது தவறான கூட்டிணைவால், போலி ஆவணங்களைத் தயாரிப்பதனால், வேண்டுமென்றே விட்டுவிடுவதனால், பிழையாகக் காட்டுவதனால் அல்லது உள்ளகக் கட்டுப்பாடுகளைத் தவிர்ப்பதனால் மோசடிகள் ஏற்படுத்துவதற்கு காரணமாகின்றது.

- உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயம் தெரிவிக்கும் நோக்கமல்லாதிருந்தும் சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளைத் திட்டமிடும் வகையில் உள்ளகக் கட்டுப்பாடுகள் மீதான அறிவு பெற்றுக் கொள்ளப்பட்டது.

- பயன்படுத்திய கணக்கீட்டு கொள்கைகளின் பொருத்தத்தன்மை, கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத்தன்மை, முகாமைத்துவத்தால் மேற்கொள்ளப்பட்ட தொடர்புகளின் வெளிப்படுத்தல்கள் மதிப்பீடு செய்யப்பட்டன.

- நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கங்களுக்கு அடிப்படையான கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் நிகழ்வுகள் பொருத்தமாகவும் நியாயமாகவும் உள்ளடக்கப்பட்டுள்ளது எனவும் வெளிப்படுத்தல்கள் உள்ளடக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல் மதிப்பீடு செய்யப்பட்டது.

இயலுமான வரையிலும் தேவையான எந்தவொரு சந்தர்ப்பத்திலும் பின்வருனவற்றை பரீட்சிப்பதற்காக விடயப்பரப்பு விரிவுபடுத்தப்பட்டுள்ளது.

- தகவல்கள் சமர்ப்பித்தல் தொடர்பாக பார்க்கும் போது நகர சபையின் செயற்பாடுகள் தொடர்ச்சியாக மதிப்பீடு செய்யப்படக்கூடிய வகையில் அதன் ஒழுங்கமைப்பு, முறைமைகள், நடைமுறைகள், பதிவேடுகள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் முறையாகவும் போதியளவிலும் திட்டமிடப்பட்டுள்ளதா எனவும் அதன் முறைமைகள் வழிகாட்டிக் கோவை, பதிவேடுகள், அறிக்கைகள்

மற்றும் ஏனைய ஆவணங்கள் ஆக்கபூர்வமாகவும் பேணிச் செல்லப்படுகின்றதா எனவும்,

- ஏதேனும் உரிய எழுத்துமூல சட்டத்திற்கோ அல்லது நகர சபையினால் வழங்கப்பட்ட பொது அல்லது விசேட ஏற்பாடுகளுக்கு இணங்க நகர சபை செயற்படுகின்றதா எனவும்,

- தனது அதிகாரங்கள், இலக்குகள் மற்றும் பணிகளுக்கு இணங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகவும்,

- வளங்கள் சிக்கனமாகவும், செயற்திறனாகவும் ஆக்கபூர்வமாகவும் கால எல்லைக்குள் மற்றும் உரிய சட்ட விதிகளுக்கு இணங்க பெறுகை செய்யப்பட்டுள்ளதாகும்.

## 1.5 ஏனைய சட்டத்தேவைப்பாடுகள் தொடர்பான அறிக்கை

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் கீழே குறிப்பிடப்பட்ட தேவைப்பாடுகள் தொடர்பாக விசேட ஏற்பாடுகள் உள்ளடக்குகின்றன.

(அ) 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 6(1)(ஈ)(iii) ஆம் பிரிவின் தேவைப்பாடுகளின் பிரகாரம் நகர சபையின் நிதிக்கூற்றுக்கள் முன்னைய ஆண்டுடன் ஒத்திருக்கின்றன.

(ஆ) 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 6(1)(ஈ)(iv) ஆம் பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ள தேவைப்படுகளின் பிரகாரம் எனது அறிக்கையின் முன்னைய ஆண்டின் போது என்னால் மேற்கொள்ளப்பட்ட பரிந்துரைகள் சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளன.

## 1.6 நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பது தொடர்பான கணக்காய்வு அவதானிப்புக்கள்

### 1.6.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | சபையின் கருத்துரைகள் | பரிந்துரைகள் |
|---|---|---|---|
| (அ) | சபை நிதியிலிருந்து மேற்கொள்ளப்பட்ட 06 கட்டட புனரமைப்பு வேலைகளின் கிரயப் பெறுமதி கூட்டுமொத்தம் ரூபா 5,296,037 நிலையான சொத்துக்களாக கணக்கீடு செய்யப்பட்டிருக்கவில்லை. | 2024 ஆம் நிதியாண்டில் குறித்த வேலைத்திட்டங்கள் உள்வாங்க நடவடிக்கை மேற்கொள்ளப்படுகிறது. | நிதிக்கூற்றுக்கள் சீராக தயாரிக்கப்பட வேண்டும். |
| (ஆ) | வேலைகள் பூர்த்தியாக்கப்படாத 06 நிர்மாண வேலைகளுக்குரிய கூட்டுமொத்தம் ரூபா 1,699,794 தொகையான மதீப்பீட்டுக் கிரயம் கடன்கொடுத்தோராக கணக்கீடு செய்யப்பட்டிருந்தன. | வேலைகளினை இவ்வருடம் மேற்கொள்ள நடவடிக்கை எடுக்கப்படும். | - மேற்படி - |
| (இ) | 02 விடயங்களில் பெறவேண்டிய ரூபா 134,100 ஆன மீதி நிதிக்கூற்றுக்களில் காட்டப்பட்டிருக்கவில்லை. | நிலுவையினை அறவிட நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. | நிதிக்கூற்றுக்கள் சீராக தயாரிக்கப்பட வேண்டும். |

### 1.6.2 கணக்கிணக்கம் செய்யப்படாத கட்டுப்பாட்டுக் கணக்குகள் அல்லது அறிக்கைகள்

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| களஞ்சியப் பேரட்டின் பிரகாரம் 2023 திசெம்பர் 31 இல் உள்ளவாறான பொருட்கள் மீதிக்கும் நிதிக் கூற்றுக்களில் காட்டப்பட்டிருந்த மீதிக்குமிடையில் கூட்டுமொத்தம் ரூபா 7,879,705 வேறுபாடொன்று காணப்பட்டது. | பதிவழிப்பு செய்வதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்படுகிறது. | நிதிக்கூற்றுக்களின் மீதிகள் உரிய மூல ஆவணங்களுடன் இணக்கம் செய்வதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். |

### 1.6.3 கணக்காய்விற்காக எழுத்துமூலச் சான்றுகள் இல்லாமை

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| மீளாய்வாண்டின் திசெம்பர் 31 இல் உள்ளவாறு ரூபா 14,089,414 பெறுமதியான ஆதனவரி நிலுவை மற்றும் அரசிறை கடனாளிகளின் கணக்கு மீதிகள் அட்டவணைகள் காலப்பகுப்பாய்வு சமர்பிக்கப்படாமையினால் கணக்காய்வின் போது திருப்திகரமாக பரீட்சிக்க முடியாமல் இருந்தது. | இந் நிதியாண்டில் சீராக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. | அட்டவணைகள் மற்றும் காலப்பகுப்பாய்வு தாயாரிக்கப்பட வேண்டும். |

## 1.7 இணங்காமைகள்

### 1.7.1 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள், முகாமைத்துவத் தீர்மானங்கள் என்பவற்றுடனான இணக்காமை

| சட்டங்கள், விதிகள், பிரமாணங்களுடனான தொடர்பு | இணங்காமைகள் | சபையின் கருத்துரைகள் | பரிந்துரைகள் |
|---|---|---|---|
| (அ) நகர சபை கட்டளை சட்டத்தின் அத்தியாயம் 255 இன் பிரிவு 160 (1) | மீளாய்வாண்டில் சபையினால் ஆதனவரி அறவிடப்பட்டிருக்க வேண்டிய 11,670 ஆதனங்களில் 2,961 ஆதனங்களிற்கு K படிவம் விநியோகிக்கப்பட்டிருக்க வில்லை. | ஆதனங்களின் உரிமையாளர்கள் வெளிநாடுகளிலும் வேறு பிரதேசங்களிலும் வசிப்பதால் அந்த படிவங்களை வழங்கமுடியாத நிலை ஏற்பட்டது. | சட்ட ஏற்பாடுகளிற்கமைய நடவடிக்கைகள் எடுக்க வேண்டும். |
| (ஆ) இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் நிதி பிரமாணம் 571(1),(2),(3) | 02 ஆண்டுகளிற்கு மேற்பட்ட கூட்டுமொத்தம் ரூபா 244,470 ஆன 41 காலங்கடந்த வைப்புக்கள் சீர் செய்யப்பட்டிருக்கவில்லை. | மீள் நினைவூட்டல் கடிதம் அனுப்புவதற்கு நடவடிக்கை எடுக்கப்படுகின்றது. | நிதிப் பிரமாணத்தின் பிரகாரம், நடவடிக்கை எடுக்க வேண்டும். |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் 2023 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான சபையின் மீண்டுவரும் செலவுகளை மிகைத்த வருமானம் ரூபா 76,124,474 ஆக இருந்ததுடன் அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டின் மீண்டுவரும் செலவுகளை மிகைத்த வருமானம் ரூபா 67,424,605 ஆகும்.

### 2.2 வருமான நிருவாகம்

#### 2.2.1 மதிப்பீடு செய்யப்பட்ட வருமானம், பட்டியலிடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம் என்பன

மீளாய்வாண்டு மற்றும் முன்னைய ஆண்டிற்காகச் சமர்ப்பிக்கப்பட்ட மதிப்பீடு செய்யப்பட்ட வருமானம், பட்டியலிடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம், நிலுவை வருமானம் என்பன தொடர்பாக தகவல்கள் கீழே தரப்படுகின்றன.

| | வருமான மூலம் | 2023 | | | | 2022 | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | மதிப்பீடு செய்யப்பட்ட வருமானம் | பட்டியலிடப்பட்ட வருமானம் | சேகரிக்கப்பட்ட வருமானம் | திசெம்பர் 31 இல் மொத்த நிலுவை | மதிப்பீடு செய்யப்பட்ட வருமானம் | பட்டியலிடப்பட்ட வருமானம் | சேகரிக்கப்பட்ட வருமானம் | திசெம்பர் 31 இல் மொத்த நிலுவை |
| | | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| (i) | வீதவரியும் வரியும் | 7,430,000 | 8,052,794 | 9,056,496 | 13,011,663 | 6,585,000 | 6,629,224 | 3,090,821 | 14,015,365 |
| (ii) | வாடகை | 25,164,600 | 38,272,015 | 38,385,545 | 899,849 | 35,069,800 | 36,283,219 | 35,067,785 | 1,013,379 |
| (iii) | உத்தரவுப் பத்திரக் கட்டணம் | 984,500 | 1,048,528 | 1,048,528 | - | 1,019,500 | 1,019,075 | 1,019,075 | - |
| (iv) | ஏனைய வருமானம் | 30,607,500 | 53,213,266 | 45,635,161 | 18,391,902 | 39,831,086 | 49,348,002 | 42,415,961 | 10,813,797 |
| | கூட்டுத் தொகை | 64,186,600 | 100,586,603 | 94,125,730 | 32,303,414 | 82,505,386 | **93,315,520** | 81,593,642 | 25,842,541 |

#### 2.2.2 வருமானங்களை சேகரிக்கும் செயலாற்றல்

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| மீளாய்வாண்டு இறுதியில் உள்ளவாறு 7,136 ஆதனங்களிலிருந்து அறவிடப்பட வேண்டிய வீதவரி நிலுவை கூட்டுமொத்தம் ரூபா 11,363,597 மீதி மற்றும் கடை அறைகள் 05 இன் வாடகை நிலுவை கூட்டுமொத்தம் ரூபா 131,850 ஆனது 10 ஆண்டுகளுக்கு மேற்பட்ட பழைமையானது ஆகும். அத்துடன், ரூபா 2,678,345 ஆன கிடைக்கப்பெற வேண்டிய முத்திரைக் கட்டணம் 13 வருடத்திற்கு மேற்பட்டதானதாகும். | நிலுவைகள் அறவிடுவதற்கும் மற்றும் பதிவழிப்பு செய்வதற்கும் நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன. | நிலுவை வருமானங்களை விரைவாக அறவிடுவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 முகாமைத்துவ செயற்திறனின்மைகள்

| | கணக்காய்வு அவதானிப்புகள் | சபையின் கருத்துரைகள் | பரிந்துரைகள் |
|---|---|---|---|
| (அ) | சபையின் வங்கி நடைமுறைக் கணக்கில் காணப்படும் ரூபா 59,339,581 மீதியினை வருமானம் உழைக்கும் மூலகங்களில் ஈடுபடுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | கவனத்தில் கொள்ளப்படுகின்றது. | வருமானம் உழைக்கும் மூலகங்களில் ஈடுபடுத்துவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ஆ) | 03 வருடங்களிற்கு ஒருமுறை மீள புதுப்பிக்கப்பட வேண்டியிருந்த 37 கடைகளுக்கான நீண்டகால வாடகை ஒப்பந்தமானது புதுப்பிக்கப்பட்டிருக்காது தொடர்ந்தும் கடந்த 08 தொடக்கம் 43 வருடங்களாக செயற்படுத்தப்பட்டிருந்தன. | உடன்படிக்கை புதிப்பிப்பதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்படுகின்றன. | வாடகை ஒப்பந்தங்கள் உரிய காலப்பகுதியில் மீள்புதுப்பிப்பதற்கு ஆக்கபூர்வமான நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (இ) | சபைக்கு சொந்தமான 02 கடைகளினை குத்தகைக்கு வழங்காமையினால் ரூபா 3,074,050 ஆன வருமான இழப்பொன்று ஏற்பட்டிருந்தது. | பதில் தரப்படவில்லை. | குத்தகைக்கு வழங்குவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

### 3.2 சொத்துக்கள் முகாமைத்துவம்

| | கணக்காய்வு அவதானிப்புகள் | சபையின் கருத்துரைகள் | பரிந்துரைகள் |
|---|---|---|---|
| (அ) | கூட்டுமொத்தம் ரூபா 72,150,000 ஆன 06 எண்ணிக்கையான காணிகள் மற்றும் 29 எண்ணிக்கையான கிணறுகள் நிதிக்கூற்றுக்களில் நிலையான சொத்துக்களில் உள்ளடக்கப்பட்டிருந்த போதிலும் அவை சபைக்கு உரித்தற்றுக் காணப்பட்டன. | சபைக்கு உரித்தாக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. | சொத்துக்களின் உரிமைகள் தீர்க்கப்படுதல் வேண்டும். |
| (ஆ) | 2015 திசெம்பர் 30 ஆந் திகதிய 2016/01 ஆம் இலக்க நிதி ஆணைக்குழு சுற்றறிக்கையின் 1.1 ஆம் பந்தி இற்கு முரணாக சபைக்குரித்தற்ற ஆதனங்களில் உள்ள கட்டிடங்கள் 08 இற்கு ரூபா 7,270,377 கிரயத்தில் புனரமைப்பு வேலைகள் மேற்கொள்ளப்பட்டிருந்தன. | காணி உறுதிகள் பெற்றுக்கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. | சுற்றறிக்கைக்கு அமைவாக நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

## 4. கணக்களிதன்மையும் நல்லாளுகையும்

### 4.1 பாதீட்டுக் கட்டுப்பாடு

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| மீளாய்வாண்டிற்காக தாயாரிக்கப்பட்டிருந்த பாதிட்டின் பிரகாரம் மதிப்பிடப்பட்ட வருமானம் மற்றும் செலவீனம் உள்ளவாறான வருமானம் மற்றும் செலவினங்களுக்கு இடையே ஒப்பிடும் போது 03 வருமான விடயங்களில் 46 சதவீதம் முதல் 101 சதவீதம் வரையிலும் 06 செலவின விடங்களில் 14 சதவீதம் முதல் 87 சதவீதம் வரையும் விலகல்களும் ஒரு மூலதனச் செலவின விடயத்தில் 106 சதவீதமான விலகலும் இருந்ததாலும் பாதீடு ஆக்கபூர்வமான முகாமைத்துவ கட்டுப்பாட்டுக் கருவியாக பயன்படுத்தப்பட்டிருக்கவில்லை. | 2024 ஆம் ஆண்டிலிருந்து நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. | தேவைப்பாடு இனங்காணப்பட்டு கவனத்துடன் பாதீடு தயாரிக்கப்பட வேண்டும். |

### 4.2 சுற்றாடல் சிக்கல்கள்

| | கணக்காய்வு அவதானிப்புகள் | சபையின் கருத்துரைகள் | பரிந்துரைகள் |
|---|---|---|---|
| (அ) | 2016 ஆம் ஆண்டில் பிலிசறு திட்டத்தில் கீழ் சேதனப்பசளை உற்பத்திக்காக ரூபா 4.69 மில்லியன் செலவில் தளம் மற்றும் நன்கொடையாக கிடைக்கப்பெற்ற குப்பைகளை அரியும் இயந்திரம் என்பன பயன்பாடின்றி சேதமடைந்து காணப்படடிருந்தது. அத்துடன் சேகரிக்கும் கழிவுப் பொருட்களினை உக்கக்கூடிய உக்காத கழிவுகளாக வேறுபடுத்தாமல் முறையற்ற விதத்தில் திண்மக்கழிவு நிலையத்தில் கொட்டப்பட்டிருந்தன. | நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது | சேதனப் பசளை உற்பத்திக்கு கவனம் செலுத்த வேண்டும். |
| (ஆ) | திண்மக்கழிவுகளை அகற்றுவதற்காக தெரிவு செய்யப்பட்டிருந்த பிரதேசத்தில் நுளம்புகள் பரவுவதனை தடுப்பதற்காக கொசு எண்ணெய் அடித்தல் மற்றும் துர்நாற்றத்தை தடுப்பதற்கான ஆக்கபூர்வமான நடவடிக்கைகள் கடந்த 02 வருடங்களாக மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. | எதிர்காலத்தில் மேற்கொள்ளப்படும். | சூழல் நட்பு வகையில் கழிவுகள் அகற்றப்பட வேண்டும். |